## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் அத்தியாயம் 3.28 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலைக் கணிப்பிடும் போது ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டியவைகள் ரூபா 27,680 குறைத்து சேர்த்தல், இருப்பு ரூபா 880,740 அதிகரித்தும் குறைத்தும், மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டியவைகள் ரூபா 117,706 சேர்க்காமலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட இறுதிக் கணக்கில் சரிசெய்யப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதி ரூபா 35,938,557 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்த பொது செயற்பாடுகளுக்கான 02 காணிகளின் பெறுமதி ரூபா 600,000 காணி மற்றும் நன்கொடையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 22,621 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | மேற்படி |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 கணக்கு விடங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 944,323,032 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 640,214,469 ஆனமையால் ரூபா 304,108,563 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்ட பட்டோலை இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கப்படும். | இணங்காமைகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம் ரூபா 1,075,673,962 மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 1,075,005,310 ஆனமையால் ரூபா 668,652 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பட்டோலைகள் இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கப்படும். | மேற்படி |
| (இ) | வைப்பு பெறுமதி பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 55,603,221 மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 55,769,875 ஆனமையால் ரூபா 166,654 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | தேறிய சொத்துக்களின் பெறுமதி, மொத்த சொத்துக்களின் மொத்தப் பொறுப்புக்கள் குறைக்கப்படும் போது ரூபா 1,152,123,799 தொகையும், திரண்ட மிகை, ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் மற்றும் மானியங்களின் பெறுமதி ரூபா 1,152,267,634 தொகையும் ஆனமையால் ரூபா 143,835 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மேற்படி | மேற்படி |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சுமர்ப்பிக்கப்படாத கணகக்காய்வு சான்று | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நடைமுறை வேலை | 104,006,357 | பட்டோலை | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் | சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி | | | |
| (i) | இலக்கம் 08 | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அடுத்துவரும் நிதியாண்டின் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 மே 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2024 மே 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலக்கம் 90 | நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்குவைக்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதும் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | மேற்படி |
| (iii) | இலக்கம் 83(ii) | ஊழியர் கடனுக்காக தனியான முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய வைப்பு பெறமதி ரூபா 1,056,630 ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 98,414,694 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,588,762 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 87,729,240 | 83,279,471 | 56,865,314 | 130,966,854 | 82,957,140 | 84,062,374 | 41,841,917 | 106,046,680 |
| (ii) | வாடகை | 5,112,000 | 4,320,386 | 4,265,939 | 183,265 | 4,289,700 | 4,266,074 | 3,985,605 | 128,818 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,230,000 | 1,633,493 | 1,633,493 | | 2,225,000 | 1,516,884 | 1,516,884 | |
| (iv) | ஏனைய வருமானம் | 27,549,000 | | 32,671,763 | | 29,394,100 | | 26,575,313 | |
| | மொத்தம் | 122,620,240 | 89,233,350 | 95,436,509 | 131,150,119 | 118,865,940 | 89,845,332 | 73,919,719 | 106,175,498 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரியும் வரியும்<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 103,578,993 ஆன நிலுவை ஆதனவரி மீதியில் அறவீடுகள் ரூபா 25,143,780 ஆனமையால் அறவீட்டின் வீதம் 24 சதவீதமாக இருந்ததுடன் இதில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,385,052 | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி வருமானம் அறிவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 1,480,426 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 70,973,040 தொகையும் காணப்பட்டது. | | |
| (ஆ) மீளாண்டில் சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 80,173,971 இனால் ரூபா 16,929,327 அறவிடப்பட்டமையால் அறவிடல் வீதம் 21 சதவீதமாக இருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடப்பாண்டின் ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் குறித்துரைத்த பிரகாரம் சபையினால் அமுல்படுத்தப்பட்ட 04 சுடலைக் கூடங்களுக்காக அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டணத்தை செலுத்துவதற்கு குழு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கூட்டுமொத்தமான ரூபா 1,742,000 பெறுமதியான கை உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பௌசர் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | கை உழவு இயந்திரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கும், தண்ணீர் பௌசர் கழிபௌசராக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பழுது பார்ப்பதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 3,500,000 ஆன பெகோ இயந்திரத்தின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பங்கள் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | உரித்தை கையேற்றல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 401,591 நிலுவையாக காணப்பட்டது. | மரணப் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அறவிடப்படும். | ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும். |